2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31–3–2021 வரை ஓராண்டுக்கு நீட்டிக்கப்படுகிறது. அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

10. அரசினர் தனித் தீர்மானம்

மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் (திருத்தச்) சட்டத்திற்கு (மையச் சட்டம் 16/2011) அரசமைப்புச் சட்டப் பிரிவு 252(1)-ன்படி ஏற்பளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்ட 1994 ஆம் ஆண்டு மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் சட்டமானது (மையச் சட்டம் 42/1994) இந்திய அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மூலம் தமிழ்நாடு மாநிலத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதாலும்;

கோவா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றங்களின் அவைகளினால் இந்திய அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1) கூறினைப் பின்பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதன் பேரில், நாடாளுமன்றத்தினால் மேற்சொன்ன சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதாலும்;

கோவா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களினால் நிறைவேற்றப்பட்ட மேற்சொன்ன தீர்மானங்களைப் பின்பற்றி நோய் தீர்க்கும் நோக்கங்களுக்காக மனித உறுப்புகளையும், திசுக்களையும் அகற்றி எடுத்தல், சேமித்து வைத்தல் மற்றும் மாற்றிப் பொருத்துதல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கும், மனித உறுப்புகளையும், திசுக்களையும் வணிக ரீதியில் ஈடுபடுத்தி வருகின்ற நடவடிக்கைகளை

தடுப்பதற்கும் 2011 ஆம் ஆண்டு மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் (திருத்தச்) சட்டமானது (மையச் சட்டம் 16/2011) நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்டது என்பதாலும்;

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுப் பொருள் குறித்து இந்தியா முழுவதிலும் ஒரே சீரான சட்டத்தினைப் பெறுவது விரும்பத்தக்கது என இந்தச் சட்டமன்றம் கருதுகின்றது என்பதாலும்;

அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி அதற்கென தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றுவதன் வாயிலாக மேற்சொன்ன சட்டத்தினை ஏற்றுக்கொள்வதன்மூலம், மேற்சொன்ன சட்டத்தினை தமிழ்நாடு மாநிலத்தில் செயல்முறைக்கு கொண்டு வருவது விருப்பத்தக்கதாக இருப்பதாக இந்தச் சட்டமன்றப் பேரவைக்குத் தோன்றுகின்றது என்பதாலும்;

இப்போது, இந்திய அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துகையில், 2011 ஆம் ஆண்டு மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் (திருத்தச்) சட்டத்தினை (மையச் சட்டம் 16/2011) தமிழ்நாடு மாநிலம் ஏற்றுக்கொள்வதாக இந்தச் சட்டமன்றப் பேரவை, இதன்மூலம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)